# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
## Sessions Case No.94/2025

**Deposition of Witness for Prosecution PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அருணாசலம் | Father's Name | : | வெள்ளைசாமி |
| Village | : | அம்மையப்பன் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 57 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 02nd day of June 2026.**

**(A1 present. A2 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது அம்மையப்பனில் வசித்து வருகிறேன். எனது சொந்த ஊர் தூத்துக்குடி கோவில்பட்டியாகும். நான் அம்மையப்பன் கடைத்தெருவில் பழைய இரும்பு கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். எனக்கு உதவியாக என் மூத்த மகன் பேச்சிராஜ் என்னுடன் இருந்து வருகிறார். கடந்த 13.07.2024 ம் தேதி காலை 8.30 மணியளவில் நானும் என் மகனும் கடையை திறந்தபோது 2 பேர் வந்து அவர்களிடமிருந்த பழைய இரும்பு சாமான்களை வாங்கிக்கொள்ள சொல்லி எங்களை மிரட்டினார்கள்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.02 14:28:19 +0530

அதில் ஒருவர் பெயர் நந்தகுமார், மற்றொருவர் பெயர் தெரியாது. அன்றைய தினம் என் கடைக்கு வந்து எங்களை மிரட்டியவர்களில் ஆஜரில் உள்ள எதியா என எனக்கு தெரியாது. எனக்கு தெரிந்த நந்தகுமார் தற்போது இறந்து விட்டார். அதன்பின் மக்கள் கூடிவிட்டதால் அவர்களிருவரும் ஓடிவிட்டார்கள். இது சம்மந்தமாக நான் போலீசில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அந்த புகார் **அ.சா.ஆ.1**. இது சம்மந்தமாக போலீசார் விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 13.07.2024 ம் தேதி காலை 8.30 மணியளவில் நானும் என் மகன் பேச்சிராஜும் அம்மையப்பன் குளிக்கரை ரோட்டில் உள்ள பழைய இரும்பு கடையை திறந்தபோது அம்மையப்பனை சேர்ந்த பிரசாத் மற்றும் நந்தகுமார் இருவரும் கடைத்தெருவில் நின்றுகொண்டு கையில் ஆளுக்கொரு அருவாளை வைத்துக்கொண்டு சத்தம் போட்டுக்கொண்டு ரோட்டில் போவோர் வருவோரை மிரட்டிக் கொண்டிருந்தார்கள் எனவும் அவர்கள் இருவரும் எங்கள் கடைக்கு வந்து கொஞ்சம்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.02 14:28:27 +0530

இரும்பு பொருட்கள் இருக்கு எடுத்துக்கலாமா என கேட்டபோது நான் பொருளை பார்க்காமல் எடுக்க முடியாது என சொன்னேன் அதற்கு இருவரும் பொழைக்க வந்த பய நீ குச்சிகாரி, தேவடியா மகனே ஊரே எங்களை பார்த்து பயப்படுது என்னை எதிர்த்து பேசுறியா என கேட்டார்கள் எனவும் நான் கடைக்கு வெளியில் வந்து ஏன் காலையிலேயே பிரச்சனை செய்கிறீர்கள் என கேட்டபோது பிரசாத்தும் நந்தகுமாரும் என்னை வெட்டுவதுபோல் வந்து கடையை மூடிட்டு உயிர்மேல் பயமிருந்தால் ஓடி போ, இல்லன்னா உன்னை கொலை செய்துவிட்டு போய்விடுவோம் என அருவாளை ரோட்டில் தேய்த்து நெருப்பை உண்டாக்குவதுபோல் மிரட்டினார்கள் எனவும் நாங்கள் பயந்துகொண்டு கடையை பூட்டிவிட்டு காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தோம் எனவும் இதை எங்கள் ஊரைச் சேர்ந்த கந்தன் பார்த்துக் கொண்டிருந்தார் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லவிட்டு தற்போது எதிரி எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்பதால் எதிரியை மீறி தொழில் செய்ய முடியாது என்பதால் எதிரியை காப்பாற்றுவதற்காக நடந்த சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.02 14:28:33 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.1ல் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.02 14:28:39 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
## Sessions Case No.94/2025

**Deposition of Witness for Prosecution PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கந்தன் | Father's Name | : | சரவணன் |
| Village | : | வடகண்டம் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 31 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 02nd day of June 2026.**

**(A1 present. A2 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது வடகண்டத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 13.07.2024 ம் தேதி காலை 8.30 மணியளவில் இறந்தபோன நந்தகுமார் அருணாசலம் கடைக்கு வந்து அவரிடமிருந்த இரும்பு சாமான்களை எடுக்க வேண்டுமேன்று கொச்சை வார்த்தையால் திட்டி அருவாளை காட்டி மிரட்டினார்கள். நான் அப்போது அந்த கடைக்கு அருகே நின்று கொண்டிருந்தேன். அருணாசலம் இரும்புகளை எடுக்க முடியாது என சொல்லி பயந்து போலீசில் புகார் கொடுத்தார்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.02 14:28:49 +0530

போலீசார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரி அருணாசலத்தை மிரட்டிவில்லை, இறந்த நந்தகுமார்தான் மிரட்டினார். ஆஜர் எதிரியை சம்பவ இடத்தில் அன்றைய தினம் நான் பார்க்கவில்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.02 14:28:54 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
## Sessions Case No.94/2025

**Deposition of Witness for Prosecution PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பேச்சிராஜ் | Father's Name | : | அருணாசலம் |
| Village | : | அம்மையப்பன் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 30 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 02nd day of June 2026.**

**(A1 present. A2 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது அம்மையப்பனில் வசித்து வருகிறேன். அ.சா.1 என் அப்பா. அ.சா.2 யை தெரியும், ஆஜர் எதிரியை தெரியாது. நானும் என் அப்பாவும் அம்மையப்பன் கடைத்தெருவில் பழைய இரும்பு கடை வைத்து தொழில் செய்து வருகிறோம். கடந்த 13.07.2024 ம் தேதி காலை 8.30 மணியளவில் நானும் என் அப்பாவும் கடையை திறந்தபோது 2 பேர் வந்து அவர்களிடமிருந்த பழைய இரும்பு சாமான்களை வாங்கிக்கொள்ள சொல்லி எங்களை மிரட்டினார்கள். அதில் ஒருவர் பெயர் நந்தகுமார், மற்றொருவர் பெயர்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.02 14:29:02 +0530

தெரியாது. அன்றைய தினம் என் கடைக்கு வந்து எங்களை மிரட்டியவர்களில் ஆஜரில் உள்ள எதியா என எனக்கு தெரியாது. எனக்கு தெரிந்த நந்தகுமார் தற்போது இறந்து விட்டார். அதன்பின் மக்கள் கூடிவிட்டதால் அவர்களிருவரும் ஓடிவிட்டார்கள். இது சம்மந்தமாக என் அப்பா போலீசில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலீசார் விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 13.07.2024 ம் தேதி காலை 8.30 மணியளவில் நானும் என் அப்பாவும் அம்மையப்பன் குளிக்கரை ரோட்டில் உள்ள பழைய இரும்பு கடையை திறந்தபோது அம்மையப்பனை சேர்ந்த பிரசாத் மற்றும் நந்தகுமார் இருவரும் கடைத்தெருவில் நின்றுகொண்டு கையில் ஆளுக்கொரு அருவாளை வைத்துக் கொண்டு சத்தம் போட்டுக்கொண்டு ரோட்டில் போவோர் வருவோரை மிரட்டிக் கொண்டிருந்தார்கள் எனவும் அவர்கள் இருவரும் எங்கள் கடைக்கு வந்து கொஞ்சம் இரும்பு பொருட்கள் இருக்கு எடுத்துக்கலாமா என கேட்டபோது நான் பொருளை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.02 14:29:11 +0530

பார்க்காமல் எடுக்க முடியாது என அப்பா சொன்னார் எனவும் அதற்கு இருவரும் பொழைக்க வந்த பய நீ குச்சிகாரி, தேவடியா மகனே ஊரே எங்களை பார்த்து பயப்படுது என்னை எதிர்த்து பேசுறியா என கேட்டார்கள் எனவும் என் அப்பா கடைக்கு வெளியில் வந்து ஏன் காலையிலேயே பிரச்சனை செய்கிறீர்கள் என கேட்டபோது பிரசாத்தும் நந்தகுமாரும் என் அப்பாவை வெட்டுவதுபோல் வந்து கடையை மூடிட்டு உயிர்மேல் பயமிருந்தால் ஓடி போ, இல்லன்னா உன்னை கொலை செய்துவிட்டு போய்விடுவோம் என அருவாளை ரோட்டில் தேய்த்து நெருப்பை உண்டாக்குவதுபோல் மிரட்டினார்கள் எனவும் நாங்கள் பயந்துகொண்டு கடையை பூட்டிவிட்டோம் எனவும் காவல் நிலையம் சென்று என் அப்பா புகார் கொடுத்தார் எனவும் இதை எங்கள் ஊரைச் சேர்ந்த கந்தன் பார்த்துக் கொண்டிருந்தார் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லவிட்டு தற்போது எதிரி எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்பதால் எதிரியை மீறி தொழில் செய்ய முடியாது என்பதால் எதிரியை காப்பாற்றுவதற்காக நடந்த சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.02 14:29:16 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு விபரங்களை என் அப்பா சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.02 14:29:24 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.94/2025

**Deposition of Witness for Prosecution PW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜா | Father's Name | : | மனோகரன் |
| Village | : | அம்மையப்பன் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 41 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 02nd day of June 2026.**

**(A1 present. A2 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது அம்மையப்பனில் வசித்து வருகிறேன். 13.07.2024 ம் தேதி காலை 11.30 மணியளவில் அருணாசலத்தின் பழைய இரும்பு கடை அருகே நானும் கலைச்செல்வனும் நின்று கொண்டிருந்தபோது அன்றைய தினம் காலை 8.30 மணியளவில் அருணாசலம் கடை வாசலில் நடந்த சம்பவம் தொடர்பாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்தை நானும் முதல் சாட்சி

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.02 14:29:31 +0530

கையெழுத்தை கலைச்செல்வனும் போட்டோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2**.

போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது, நான் படித்துப் பார்க்கவில்லை, போலீசாரும் படித்துக் காண்பிக்கவில்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.02 14:29:37 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.94/2025

**Deposition of Witness for Prosecution PW 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கலைச்செல்வன் | Father's Name | : | ராமலிங்கம் |
| Village | : | அம்மையப்பன் | Taluk | : | திருவாரூர். |
| Calling | : | | Age | : | 23 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 02nd day of June 2026.**

**(A1 present. A2 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது அம்மையப்பனில் வசித்து வருகிறேன். 13.07.2024 ம் தேதி காலை 11.30 மணியளவில் அருணாசலத்தின் பழைய இரும்பு கடை அருகே நானும் ராஜாவும் நின்று கொண்டிருந்தபோது அன்றைய தினம் காலை 8.30 மணியளவில் அருணாசலம் கடை வாசலில் நடந்த சம்பவம் தொடர்பாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்தை நானும் 2 வது

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.02 14:29:44 +0530

சாட்சி கையெழுத்தை ராஜாவும் போட்டோம். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது, நான் படித்துப் பார்க்கவில்லை, போலீசாரும் படித்துக் காண்பிக்கவில்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.02 14:29:50 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.94/2025**

**Deposition of Witness for Prosecution PW 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜா | Father's Name | : | சங்கர் |
| Village | : | அம்மையப்பன் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 55 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 02nd day of June 2026.**

**(A1 present. A2 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது அம்மையப்பனில் வசித்து வருகிறேன். நான் அம்மையப்பனில் ராஜா ஸ்வீட்ஸ் என்ற பெயரில் கடை வைத்துள்ளேன். 13.07.2024 ம் தேதி பகல் 2.15 மணியளவில் நானும் சரவணனும் சிவசக்தி பட்டு சென்டர் பஸ் டாப்பை கடந்து சென்றபோது கொரடாச்சேரி போலீசார் பிரசாத் மற்றும் நந்தகுமாரை கைது செய்து அதில் பிரசாத் போலீசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் முதல் சாட்சியாகவும் சரவணன் 2 வது சாட்சியாகவும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.02 14:29:56 +0530

கையெழுத்து போட்டோம். என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3**. பின் 3.30 மணியளவில் பிரசாத் இரும்பினாலான 2 அருவாள்களை போலீசாரிடம் எடுத்து கொடுத்தார். அதை போலீசார் மகஜரில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் சரவணன் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.4**. மேற்படி 2 அருவாள்கள் முறையே **சா.பொ.1, சா.பொ.2**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து போட்ட ஆவணங்களில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் படித்துப் பார்க்கவில்லை, போலீசார் கையெழுத்து கேட்டதால் போட்டு கொடுத்தேன். என் முன்னிலையில் எந்த பொருளும் போலீசாரால் கைப்பற்றப்படவில்லை என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.02 14:30:02 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.